முழு அளவில் பாடப் புத்தகங்கள் முன்கூட்டியே கிடைக்க என்ன உத்தரவாத முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன். அத்துடன் பாட நூல் விற்பனை மையங்கள், முனைவர்கள் இல்லாத இடங்களில் அவற்றை ஏற்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சகம் ஒன்றைத் தகுந்த முறையில் உருவாக்க வேண்டுமென்ற கருத்துரு கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு முயற்சிக்கப்படுகிறது. ஆனாலும் கூட அவ்வளவு வேகமாக அது முழு அளவில் அச்சடித்துக் கொடுத்துவிடும் அளவுக்குப் பணி நடைபெற்றுவிடும் என்று கருத இயலவில்லை. வருகிற ஆண்டுகளில் முழு அளவில் அது செயலாற்றும் என்று நாம் எதிர்பார்க்கலாம். அடுத்து, உடனடியாகப் புத்தகங்களை அச்சிட்டுப் பெற டெண்டர் கேட்டுக் கொண்டிருப்பதாக நான் அறிந்து கொண்டிருக்கிறேன். அதற்கு மேல் பிறமொழிப் பாட நூல்களை தேவைக்கேற்ப அச்சிட்டு காலத்தில் கிடைக்க முன்கூட்டியே வழிவகை செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இவை எல்லாம் நாள் தோறும் இத்துறை செய்ய வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்.

11.15 மணி

(அ) மதிப்பீட்டுக்குழு :

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறைபற்றி, மதிப்பீட்டுக்குழு அளித்த பரிந்துரையின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்த, குழுவின் முதலாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை இம்மாமன்றத்திற்கு அளிக்கிறேன்.

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு :

மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் முதலாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.